# COVID - 19 காலப்பகுதியில் நிகழ்நிலை மூலமான கற்றல் செயற்பாடுகளினால் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்கள்: இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட முதலாம் வருட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு

# Challenges faced by undergraduates in online learning during COVID-19: a research based on first year students of Faculty of Islamic Studies and Arabic Language

P.M.A. Aleeshan[1], B. Hasana[2], M.S. Zunoomy[3]

[1,2&3] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.
anwaralisan96@gmail.com, hasfasry510@gmail.com, zunoomyzain94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** கொரோனா வைரஸ் பாதிப்பால் மிக முக்கியமான துறையான கல்வித் துறையானது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்றுவரை மீண்டும் பழைய கல்வி கற்றல் செயற்பாட்டிற்கு மீள முடியாத நிலைமை காணப்படுகிறது. எமது நாட்டில் COVID-19 தொற்றுக் காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிகழ்நிலை மூலமான கற்பித்தல் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டது. நிகழ்நிலைக் கற்கைமுறை மூலமான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளினால் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீட முதலாம் வருட மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்களை அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும். பண்புசார் விபரிப்பு ஆய்வு முறையியலில் அமைந்த இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகளுக்காக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் ஆகிய முறைகளைப் பயன்படுத்துகின்றது. வினாக்கொத்தானது எளிய எழுமாற்று அடிப்படையில் இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழிப் பீட முதலாம் வருட மாணவர்கள் தொன்னூறு பேருக்கு வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், பத்து பேரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. நிகழ்நிலைக் கற்றல் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தாமல் தொடர்ந்தும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழிவகுத்துள்ளது. இருப்பினும் பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர். மேலும், வகுப்பறைக் கற்றலுக்கு பழக்கப்பட்ட மாணவர்கள் நிகழ்நிலைக் கற்றலினாலும் அறிமுகமில்லாத மென்பொருட்கள் பாவனையினாலும் கற்றலில் தெளிவின்மையாலும் பல்வேறு இன்னல்களை சந்தித்துள்ளனர். மேலும், சுகாதார ரீதியிலான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர் என்பன இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும்.

**திறவுச் சொற்கள்:** நிகழ்நிலைக்கல்வி, பல்கலைக்கழக மாணவர்கள், சவால்கள், கொவிட் 19

**ஆய்வு அறிமுகம்**

கொரோனா வைரஸ் தொற்றானது முதன்முதலில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டதுடன் தற்போது உலகளாவிய நோய்த் தொற்றாக மாறியுள்ளது. அத்தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை அதன் பிடியை சற்றும் தளர்த்தாமல் பெறுமதியான மனிதனின் உயிருடன் விளையாடி வருகின்றது. பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை, இடப்பெயர்வு எனப் பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். பொது முடக்கத்தினால் பெரும்பாலான துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கல்வித் துறையும் பெரும் சரிவை சந்தித்துள்ளது. இலங்கையில் கல்வியில் எழுச்சி ஏற்பட்ட காலத்திலிருந்து இதுவரை எந்தத் தலைமுறையினரும் எதிர்கொள்ளாத ஒரு பிரச்சினையை நடப்புக் கல்வியாண்டு மாணவர்கள் எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இக்காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் இடர்காலத்திற்குப் பொருத்தமான கல்வி முறையாக இணையவழிக் கற்றல் (online learning) மற்றும் தொலைக்கல்வி (distance education) என்பவற்றை ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பு (UNESCO) முன்மொழிந்துள்ளது (அட்மின், 2020). இந்நாட்டிலும் இணையவழிக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க கொரோனா தொற்று நிலைமை மேலும் வழிவகுத்துள்ளது. இதன் மூலம் பாடசாலை, தனியார் வகுப்புக்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் நிகழ்நிலைக் கல்வி முறை நடைமுறைப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதனை அறியலாம். உயர் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நவீன தொழிநுட்பங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் வீட்டிலே வீணாக காலம் கழிக்காமல் இருக்க கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஒன்லைனில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு கற்றல் கற்பித்தலை நிகழ்நிலைக்கு மாற்றுவது என்பது மிக முக்கியமான விடயமாக இன்று காண முடிகிறது. இதற்கு Zoom, Google Meetup, Moodle போன்ற மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

கற்றலுக்கான சூழ்நிலையை தீர்மானிக்கும் மிகவும் முக்கியமான ஒரு காரணி ஆசிரியர் நடத்தை ஆகும். விரும்பியோ விரும்பாமலோ ஆசிரியரின் நடத்தைகள் அனைத்தும் மாணவர்களின் நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றன (ஜவ்பர், 2016). சிறந்த கல்விச்செயற்பாடு என்னவென்று நோக்கினால் மாணவரும் விரிவுரையாளரும் விரிவுரை மண்டபத்தில் சந்தித்துப் பேசி கலந்துரையாடி தொடர்பாடுவதே மிகச்சிறந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடாக அமைய முடியும். பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கம் இயந்திர மனிதர்களை உருவாக்குவதற்கல்ல. மாறாக, சமூக பிரக்ஞை உள்ள உயர் சிந்தனை கொண்ட பயன்மிகு பிரஜைகளை உருவாக்குவதாகும். அதற்கு நேரடியான சமூக ஊடாட்டமும் பங்குபற்றலும் மிகவும் அவசியமாகும். ஆனால், நிகழ்நிலைக் கற்பித்தலில் அதற்கு வாய்ப்பு அரிதாகவே காணப்படுகின்றது. இருப்பினும், இக்கால சூழ்நிலை கருதி இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இந்நிகழ்நிலை மூலமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. COVID-19 தொற்றுக் காலத்தில் இலங்கையினுடைய கல்விச் செயற்பாடுகள் பின்னடைவைச் சந்தித்ததோடு அதற்கு மாற்றுவழிகளாக நிகழ்நிலை மூலமான கற்றல், கற்பித்தல் முறை இலங்கை

அரசினால் பரிந்துரைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன இதனால் மாணவர்கள் சவால்களை சந்திக்க நேரிட்டனர் (நிர்மலன், 2020) அந்த வகையில், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள எல்லாப் பீடங்களிலும் நிகழ்நிலைக் கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட முதலாம் வருட மாணவர்கள் சில தவிர்க்க முடியாத பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

உலகளாவிய ரீதியில் கொவிட்-19 காலத்திற்குப் பொருத்தமான கல்வி முறையாக நிகழ்நிலை மூலமான கல்வி முறை (Online Learning) அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. COVID-19 தொற்று காரணமாக இலங்கை நாட்டிலும் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், பாடசாலைகள் என்பன மூடப்பட்டு நிகழ்நிலை மூலம் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு வினைத்திறனான மாற்று வழிமுறையாக இருந்தாலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இது ஒரு சவாலான விடயமாகவே காணப்படுவதோடு மாணவர்களும் இதனால் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டார்கள் என்பதை கண்டறிய இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

நிகழ்நிலைக் கற்கைமுறை மூலமான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளினால் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீட முதலாம் வருட மாணவர்கள் எதிர் நோக்கிய சவால்களை அடையாளப்படுத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு வரையறை**

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் ஆய்வுப் பிரதேசமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் முதலாம் வருடத்திலுள்ள நூறு மாணவர்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. முதலாம் நிலைத் தரவுகளுக்காக வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்தானது எளிய எழுமாற்று அடிப்படையில் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் தொன்னூறு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், பத்து பேரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள் இணையத்தளங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட முதல் வருட மாணவர்களிடத்தில் நிகழ்நிலை கல்வி செயற்பாடு தொடர்பான விடயங்கள் பின்வருமாறு கலந்துரையாடப்படுகின்றன. நிகழ்நிலை மூலமான விரிவுரை நேரசூசியினைப் பற்றிய மாணவர்களின் பொருத்தப்பாட்டினைக் வினவியபோது 68.1 வீதமான மாணவர்கள் பொருத்தமற்றது என அதிருப்தியினை வெளிப்படுத்தியுள்ளனர். அதேநேரம் இரவு நேரங்களிலும் விரிவுரைகள் இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற்றுள்ளதால் அதிக சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவித்தனர். இதனை படம் 01 விபரிக்கின்றது.

நிகழ்நிலை மூலமான விரிவுரை நேரசூசியானது உமக்குப் பொருத்தமானதாக இருந்ததா?




படம் 01: நிகழ்நிலை மூலமான விரிவுரை நேரசூசி

வலையமைப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு 83 வீதமான மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இலங்கையில் பிரதேசத்துக்குப் பிரதேசம் இணைய வேகமானது வேறுபட்டுக் காணப்படுவதால் இணையவழிக் கற்றலிலும் சில பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதனை படம் 02 தெளிவுபடுத்துகின்றது.

வலையமைப்புகளை பெற்றுக்கொள்வதில் உமது பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகளை எதிர்கொண்டீர்களா?





படம் 02: பிரதேச ரீதியாக வலையமைப்பு வேறுபாடுகள்

நிகழ்நிலை மூலமான கற்றல் நடவடிக்கைகளுக்கு மாணவர்கள் பாவித்த இணையப் பாவனை முறை பற்றி கேட்கப்பட்ட போது 74.5 வீதமான மாணவர்கள் ஒரு கிழமைக்கு 50 மற்றும் 100 ரூபாய் Data Cards பாவிப்பதாகவும், 19.1 வீதமான மாணவர்கள் ஒரு மாதத்திற்கு



ISBN 978-624-5736-14-0

900 மற்றும் 1400 ரூபாய் பெறுமதியான Wifi Router Package பாவிப்பதாகவும் கூறினர். இதனை படம் 03 விபரிக்கின்றது.




படம் 03: இணைய பாவனை முறைகள்

நிகழ்நிலை கற்கையினை மேற்கொள்ள மாணவர்களின் வருமான வசதி தொடர்பாக கேட்கப்பட்டபோது 57.4 வீதமான மாணவர்கள் ஓரளவு போதுமானதாக இருந்தது என்றும் 27.7 வீதமான மாணவர்கள் போதுமானதாக இருக்கவில்லை என்றும் கூறியுள்ளனர். வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுமே இதன் மூலம் அதிக இன்னல்களை சந்தித்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இதனை படம் 04 தெளிவுபடுத்துகின்றது.




படம் 04: வருமான வசதி நிலைமைகள்

உரிய நேரத்திற்கு விரிவுரைகளில் கலந்துகொள்ளல் பற்றி மாணவர்களிடம் கேட்கப்பட்ட போது 70.2 வீதமான மாணவர்கள் ஐந்து, பத்து நிமிடங்கள் கழித்து சற்று தாமதமாகவே இணைந்து கொள்வதாக கூறியுள்ளனர். இதற்கு காரணம் தொழிநுட்ப வசதி குறைவு மற்றும் இணையப் பிரச்சினைகள் போன்றன என்றும் கூறினர். இதனை படம் 05 விபரிக்கின்றது.


ISBN 978-624-5736-14-0


உரிய நேரத்திற்கு உங்களுக்கு விரிவுரைகளில் கலந்துகொள்ளக் கிடைத்ததா?




படம் 05: விரிவுரைகளுக்கு உரிய நேரத்திற்கு கலந்துகொள்ளல்

விரிவுரை நேரங்களின்போது மாணவர்களின் சந்தேகங்கள் விரிவுரையாளர்களினால் தீர்க்கப்பட்டதா? என்பது பற்றி கேட்கப்பட்ட போது 57.4 வீதமான மாணவர்கள் இல்லை என்றே தங்களது அதிருப்தியினை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் நேரடியான விரிவுரைகள் போன்று இம்முறை மூலமான விரிவுரைகள் மிகுந்த ஆக்கபூர்வமாக அமைவதில்லை என்றும் மற்றும் பாடங்களை புரிந்துகொள்வதில் சிரமங்கள் உள்ளன என்றும் கூறினர். இதனை படம் 06 தெளிவுபடுத்துகின்றது.

விரிவுரை நேரங்களில் விரிவுரையாளர்களினால் உங்களது சந்தேகங்கள் மிகத் தெளிவாக தீர்க்கப்பட்டனவா?




படம் 06: சந்தேகங்கள் தீர்க்கப்படல்

நிகழ்நிலை மூலமான கற்றல் செயற்பாடுகளினால் மாணவர்களுக்கு ஏற்பட்ட உடல் ரீதியிலான, உள ரீதியிலான, பொருளாதார ரீதியிலான, சமூக ரீதியிலான பிரச்சினைகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

**01.** உடல் ரீதியிலான பிரச்சினைகள்: தலைவலி, உடற்சோர்வு, இடுப்பு வலி, மூட்டு வலி, கண்நோவு, கண்ணீர் வடிதல், காது வலி போன்றன முக்கியப் பிரச்சினைகளாகும்.

**02.** உளரீதியிலான பிரச்சினைகள்: மன அழுத்தம், மனச்சோர்வு, வெறுப்புணர்ச்சி ஏற்படல், நம்பிக்கை இழந்து போதல், விரைவில் எரிச்சலடைதல், ஆர்வமின்மை போன்றனவாகும்.

**03.** பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள்: போதியளவான வருமானமின்மை, தொழில்வாய்ப்பின்மை, அரச ஊக்குவிப்புத்தொகை போதாமை, மஹாபொல மற்றும் Bursary போன்ற அரச பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கிடைக்கும் அரச ஊக்குவிப்புத்தொகை உரிய நேரத்திற்குக் கிடைக்காமை போன்றன மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளாகும்.

**04.** சமூக ரீதியிலான பிரச்சினைகள்: Zoom App இல் நம்பகத்தன்மை குறைவு, பயனாளர்களின் தரவுகள் - (Photos, Videos, Documents, Contacts) போன்றவற்றின் பாதுகாப்பு உறுதியின்மை, Video On பண்ணுவதால் ஏற்படும் சமூகப் பிரச்சினை போன்றவைகளாகும்.

**05.** நிகழ்நிலை மூலமான விரிவுரைகளை செவிமடுப்பதில் மாணவர்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளாக: விரிவுரைகளின் போது Video On பண்ணுதல் மற்றும் Mic On பண்ணுதல், வெளிச் சூழலில் இருந்து வரும் சப்தம், வலையமைப்புப் பிரச்சினைகள், விரிவுரைகளில் பேச்சு தெளிவின்மை, வீட்டுச்சூழல் போன்றனவாகும்.

**06.** கற்றல் சார்ந்த ஆவணங்கள் மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாமை: Slides, pdf, word documents, session’s videos போன்றன மாணவர்களுக்கு போதியளவாக கிடைக்கவில்லை. அதே நேரம் அதனை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் கூறினர்.

**07.** மாணவர்கள் பாடத்திட்டத்தினையும் அதன் உள்ளடக்கத்தினையும் விளங்கிக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டனர்: பெரும்பாலான மாணவர்கள் தங்களுக்கு பாடம் தொடர்பான போதிய தெளிவின்மை காணப்பட்டதாகவே கூறினர். இதற்கான காரணங்களாக: முதல் வருட மாணவர்களுக்கு பாடத்திட்டங்கள் பற்றி அறிமுகமில்லை என்பதால் அதனை புரிந்தகொள்வது கடினமாக அமைந்திருந்தது. Coverage issues, மழை காலங்களில் விரிவுரைகளுக்கு செல்லவே முடியாது இன்னும் சில தொழிநுட்பம் சார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றினால் விரிவுரைகளில் முழுமையாக கவனம் செலுத்த முடியாமை என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே இதன் மூலம் மாணவர்களுக்கு பாடத்திட்டம் அதன் உள்ளடக்கங்கள் பற்றிய போதிய தெளிவுகள் கிடைக்கப் பெறவில்லை என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

**08.** தொழிநுட்ப சாதனங்கங்களின் பற்றாக்குறை மற்றும் தொழிநுட்பக் குறைபாடுகள்: நிகழ்நிலை மூலமான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் நடுத்தர மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் போதியளவான தொழிநுட்ப சாதனங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும் பொருளாதார வசதியுள்ள


ISBN 978-624-5736-14-0

மாணவர்கள் அவ்வகையான பிரச்சினைகளை பெரிதளவில் எதிர்கொள்ளவில்லை என்றும் அறிய முடிகிறது. மடிக் கணினி வசதி இன்மை, பொருளாதார வசதியின்மை, தந்தையின் வருமானம் போதாமை காரணமாக ஒரு வீட்டில் இரண்டுக்கும் மேற்பட்ட படிக்கும் மாணவர்கள் இருந்தால் அவர்களும் படிப்பதற்கு தேவையான ஸ்மார்ட் போன்களை வாங்குவதற்கான வசதியின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். எனவே இதன் மூலம் வறிய மற்றும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறே, Coverage problem, இணைய வேக அளவு குறைவு, laptop, smart phone போன்றன அதீத பாவனையால் பழுதாகுதல், laptop, smart phone load ஆகுதல் போன்ற தொழிநுட்ப ரீதியான குறைபாடுகளை அம்மாணவர்கள் எதிர்நோக்கினர் என்பதை அவதானிக்க முடிகின்றது.

**09.** Assignment, Presentation, Mid exam, Oral test போன்ற அறிமுகமில்லாத விடயங்களில் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்: அதாவது Coverage problem, போதுமான குறிப்புகள் கைவசம் இல்லாமை, உரிய நேரத்திற்கு Assignment ஓப்படைக்க முடியாமை மற்றும் அனுப்புவதில் ஏற்படும் சிரமங்கள், நேரம் போதாமை, பதற்றம் போன்ற காரணங்களால் பல சவால்களை இம்மாணவர்கள் சந்தித்துள்ளனர்.

**முடிவுரை**

கொரோனா வைரஸ் எனப்படும் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் நடவடிக்கையானது நிகழ்நிலை மூலமாக பூர்த்தி செய்யப்பட்டது. அதிலும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட முதலாம் வருட மாணவர்களுக்கு நிகழ்நிலைக்கல்வி பற்றிய அறிமுகமின்மை, புதிய மென்பொருட்களின் பயன்பாடு, வலையமைப்பு சார்ந்த பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், நேரசூசி வேறுபாடு, இணைய அளவின் வேகக்குறைவு, பொருத்தமற்ற வீட்டுச்சூழல், உடல், உள ரீதியிலான பிரச்சினைகள், கற்றல் சார்ந்த ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை, தொழிநுட்ப சாதனங்களின் பற்றாக்குறை போன்ற பல சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வாக சிறந்த தங்கு தடையற்ற இணைய வசதிகளைச் செய்து கொடுத்தல், மாணவர்களுக்குப் பொருத்தமான விரிவுரை நேரசூசியினை வழங்கல், நிகழ்நிலைக் கற்கைக்கான பொதுவான, பொருத்தமானதொரு மென்பொருளினை அறிமுகம் செய்தல், கற்றல் சார்ந்த ஆவணங்களை உரிய காலத்திற்குள் கொடுத்தல் போன்ற சிறந்த செயற்பாடுகள் மூலமாகவும் நிகழ்நிலை மூலமான கற்றல் தொடர்பாக மாணவர்களுக்கு அறியப்படுத்துவதன் ஊடாகவும் இதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளை இழிவளவாக்க முடியும் என ஆய்வின் இறுதியில் அறியக் கூடியதாகவும், உறுதி செய்யக்கூடியதாகவும் இருந்தது.

**விதந்துரைகள்**

- மாணவர்களுக்கு நிகழ்நிலைக் கல்வியை மேற்கொள்வதற்குத் தேவையான இணைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- புதிய தொழிநுட்ப சாதனங்கள் பற்றிய உரிய தெளிவுகளை மாணவர்களுக்கு வழங்குவதோடு அதுதொடர்பான கருத்தரங்குகளை நடாத்துதல்.
- பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு விஷேட புலமைப்பரிசில் திட்டத்தினை அறிமுகம் செய்தல் மற்றும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகைகளை உரிய நேரத்திற்கு வழங்கல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- விரிவுரை நேரசூசிகளை மாணவர்களோடு கலந்தாலோசித்து அவர்களுக்குப் பொருத்தமான நேரங்களை கருத்திற்கொண்டு அமைத்துக்கொடுத்தல்.
- மாணவர்களுக்கு தேவையான குறிப்புகள், பாடத்திட்டங்களை உரிய முறையில் வழங்குதல்.
- நிகழ்நிலை மூலமான விரிவுரைகளை கற்கத் தவறிய மாணவர்களுக்காக விஷேட பிரத்தியேக வகுப்புக்களை ஏற்பாடு செய்தல்.

**உசாத்துணைகள்**


Abdullah, M.M.A.; Sharmina, A.M.F.; Suhaima, M.R.J.; Mazahir, S.M.M. (2021). University Students' Satisfaction with Teaching Activities Carried out through the Online Learning Process: A Study Based on Department of Islamic Studies of the South Eastern University of Sri Lanka. *Proceedings - 9th South Eastern University International Arts Research Symposium, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.*

Aram hospital. (2020). *இணையவழிக் கல்வியின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள்.* Accessed on: 02.06.2021. Retrieved from: http://aramhospital.com/news-posts.

Hasana, B., Nawas, A. N. M., Aayisha. (2021). கோவிட் -19 காலப்பகுதியில் கற்றல் செயற்பாட்டில் உயர்தர மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள்: புத்தளம் கல்பிட்டி பாடசாலை கலைப்பிரிவு மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு. *9th South Eastern University International Arts Research Symposium. SEUIARS 2020.*

Jesuiya, D.; Priyadarshani, H.D.C. (2020). Impact on Online Teaching Learning Process during COVID-19: with Reference to Faculty of Education, The Open University of Sri Lanka. *7th International Symposium 2020, FIA, SEUSL.*

Nafrees, A.C.M., Roshan, A.M.F., Nuzla Baanu, A.S., Fathima Nihma, M.N., and Shibly, F.H.A. (2020). Awareness of Online Learning of Undergraduates during COVID

19 with special reference to South Eastern University of Sri Lanka. *Journal of Physics: Conference Series*, 1712 (2020) 012010, doi:10.1088/1742-6596/1712/1/012010.

Nafrees, A.C.M., Roshan, A.M.F., Nuzla Baanu, A.S., Shibly, F.H.A., Maury, R., Ahmadh Rifai Kariapper, R.K. (2020). An Investigation Of Sri Lankan University Undergraduates' Perception About Online Learning During COVID-19: With Superior References To South Eastern University 2020. *Solid State Technology*, 63(6), p. 8829-8840.

Nathira Jahan, S., Aaqil, A. M. M., Sabeeha, A. M. F. (2021). Covid 19 தாக்கத்தால் இம்முறை உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள்; இணையவழி (Online) ஊடாக கற்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்: சம்மாந்துரைப் பிரதேசத்தின் அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர்க் கல்லூரி மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வு. *9th South Eastern University International Arts Research Symposium. SEUIARS 2020.*

Risla Banu, M. H., Rimaza, R. M .F., Zeeras Banu, M. H., Ashfa, M. A. F., Ijas Mohamed, A. (2021). Covid- 19 என்ற தொற்றுநோய்க் காலப்பகுதியில் நிகழ்நிலைக்கல்வி மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளும் மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்களும்: தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு. *9th South Eastern University International Arts Research Symposium. SEUIARS 2020.*

அட்மின். (2020). *கொரோனா (COVID-19) தொற்றும், இணையவழிக் கற்பித்தலும் ஓர் பார்வை.* Accessed on: 14.06.2021. Retrieved from: https://www.ecguidance.com/2020/10.

இராமச்சந்திரன் நிர்மலன். (2020). *இலங்கையில் இணையக் கல்வியிலுள்ள சவால்கள்.* Accessed on: 01.06.2021. Retrieved from: http://thinakkural.lk/article/58828.

தூபே, பிரியங்கா. (2020). *கொரோனா வைரசால் மாறிய கல்வி:இணையம் இல்லாத மாணவர்களின் எதிர்காலம் என்ன?* Accessed on: 03.06.2021. Retrieved from: https://www.google.com/amp/s/www.bbc.com/tamil/india-53198344.amp

நாகேந்திரன், இராஜசிங்கம். (2020). *கொரோனா (Covid 19) தொற்றும் இணையவழிக் கற்பித்தலும் ஓர் பார்வை.* Accessed on: 02.06.2021. Retrieved from: https://www.teachmore.

முத்துமாரி, எம். (2020). *கொரோனாவால் முடங்கிய கல்வி.* Accessed on: 30.05.2021 Retrieved from: https://www.google.com/amp/s/m.dinamani.com/year-ender.

ஜவ்பர், பீ. (2016). *ஜனநாயக வகுப்பறை முகாமைத்துவம்.* இலங்கை.